வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையே

# 2ம் நாளாக இன்று மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்

சென்னை, டிச. 27-
சென்னை வண்ணாரப்பேட்டை முதல் திருவெற்றியூர் விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் இரண்டாம் நாளாக இன்று நடைபெற்றது.

சென்னை வண்ணாரப்பேட்டை முதல் திருவெற்றியூர் விம்கோ நகர் வரையில் மெட்ரோ ரயில் முதல் வழித்தட திட்ட நீட்டிப்பு பணிகள் 90 சதவீதம் முடிவடைந்துள்ளது. இவ்வழித்தடத்தில் வரும் ஜனவரி மாதம் சேவையை தொடங்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று வண்ணாரப்பேட்டை முதல் திருவெற்றியூர் விம்கோ நகர் இடையே டீசல் ரயில் இன்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடைபெற்றது. முதல் நாளான நேற்று 9.1 கி.மீ தூரம் இன்ஜின் வெற்றிகரமாக இயக்கி பார்க்கப்பட்டது. நேற்று 2 சுரங்கப்பாதை ரயில் நிலையங்களும், 6 மேம்பால நிலையங்களும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து, இரண்டாம் நாளாக இன்று காலை 10 மணிக்கு வண்ணாரப்பேட்டை முதல் திருவெற்றியூர் விம்கோ நகர் இடையே டீசல் ரயில் இன்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அப்போது, ரயில் பாதைகள், தண்டவாளங்கள், சிக்னல்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து வரும் ஜனவரி மாத இறுதிக்குள் சேவை தொடங்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.